DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.7**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

NAME : குமார்

Father Name : நடராஜன்

VILLAGE :

CALLING :

AGE : 63

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.02.2026.

(1, 2 மறறும் 7 வது எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11 வது எதிரி இறப்பு. 3, 4, 5, 6, 9, 10, 12, 13, 14, 15, 16, 17 மற்றும் 18 எதிரிகள் ஆஜர். 8வது எதிரி ஆஜர் இல்லை. 8வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை :**</u>

நான் தற்போது மதுரை பழங்காநத்தம், நேரு நகரில் கதவு எண்.8A மருதுபாண்டியர் நகர் 2வது தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் மதுரையில் கார்ப்பரேட் கம்பெனியில் முதுநிலை பொது மேலாளராக நிதி பிரிவில் பணிபுரிந்து ஓய்வு பெற்று அதே கம்பெனியில் ஆலோசகராக பணிபுரிந்து வருகிறேன். என் உடன் பிறந்தவர்கள் 3 தம்பிகள் ஆவார்கள். அதில் என்னுடைய 2வது தம்பி தான் இந்த வழக்கு சம்பவத்தில் இறந்துபோன சுரேஷ்பாபு ஆவார். என் தம்பி சுரேஷ்பாபு திமுக கழகத்தில் தலைமை செயற்குழு உறுப்பினராக இருந்தார். என் தம்பி சுரேஷ்பாபு தான் பொட்டு சுரேஷ் என்று அழைக்கப்பட்டார். 1998ம் வருடம் என் தம்பிக்கு மதுரையில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு.மு.க. அழகிரி அவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. என் தம்பி சுரேஷ்பாபு முன்னாள் அமைச்சர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தார். இதனால் சில பேர் திரு. அழகிரி அவர்களிடம் நெருங்க முடியவில்லை. அதன் காரணமாக கட்சியில் பொறாமைபட்டவர்கள் நிறைய பேர்

உண்டு, அதில் 1ம் எதிரியும் ஒருவர். என் தம்பி சுரேஷ்பாபு ஊரில் இருக்கும் போது ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் நான் என் தம்பி சுரேஷ்பாபுவின் வீட்டிற்கு சென்று நாங்கள் சாதாரணமாக பேசுவோம். அப்போது 27.01.2013ம் தேதி ஞாயிற்று கிழமை அன்று என் தம்பி சுரேஷ்பாபுவிடம் நான் பேசிக்கொண்டிருக்கும் போது என் தம்பியின் மனைவி 1வது எதிரி அட்டாக் பாண்டி அவருடைய கூட்டாளியும் என் தம்பி சுரேஷ்பாபுவை கொலை செய்வதாக பயமுறுத்திய விபரத்தை என்னிடம் சொன்னார். அதற்கு நான் போலீஸில் புகார் கொடுத்து பாதுகாப்பு கேட்போம் என்று சொன்னேன். அதற்கு என் தம்பி சுரேஷ்பாபு அது எல்லாம் ஒன்று வேண்டாம் என்று சொல்லிவிட்டார். ஒவ்வொரு வருடமும் 30ம் தேதி ஜனவரி மாதம் திரு. அழகிரி அவர்களின் பிறந்த நாள் அன்று வாழ்த்து சொல்வதற்கு என் தம்பி சுரேஷ்பாபு செல்வார். மேற்படி 2013ம் வருடத்தில் 27.01.2013ம் தேதியே சென்று திரு. அழகிரி அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். அப்போது திரு.அழகிரி அவர்கள் அங்கிருந்த நபர்களிடம் என் தம்பி சுரேஷ்பாபு மீது பகைமை பாராட்ட வேண்டாம் என்று கூறியதாக என் தம்பி சுரேஷ்பாபு என்னிடம் கூறினார். பின்னர் 29.01.2013ம் தேதி அன்று நண்பர்களுடன் கொடைக்கானல் சென்றுவிட்டு 31.01.2013ம் தேதி அன்று மதியம் 01.30 மணியளவில் வீடு திரும்பினார். பின்னர் அன்று மாலை சுமார் 04.30 மணியளவில் என் தம்பி சுரேஷ்பாபுவின் டிரைவர் **அ.சா.1** மணி என்ற மணிகண்டனை வரச்சொல்லி திருப்பாலை யாதவா கல்லூரி அருகில் உள்ள என் தம்பி சுரேஷ்பாபுவின் அலுவலகத்திற்கு சென்றுவிட்டு சுமார் இரவு 07.00 மணியளவில் வீடு திரும்பினார், வீடு திரும்பும் சமயத்தில் சத்ய சாய் நகர் முருகன் கோவில் அருகே சுமார் 07.40 மணியளவில் என் தம்பி சுரேஷ்பாபுவின் காரை மறித்து சுமார் 7 மற்றும் 8 நபர்கள் என் தம்பி சுரேஷ்பாபுவை கொலை செய்தார்கள். அந்த நேரம் நான் எனது அலுவலகத்தில் இருந்தேன். எனக்கு சுமார் 08.00 மணியளவில் என் தம்பி சுரேஷ்பாபுவின் நண்பர் பாலதம்புராஜ் எனக்கு போன் செய்து என் தம்பியை

வெட்டிவிட்டார்கள் என தகவல் சொன்னதன் பேரில் நான் அவரசமாக சம்பவ இடத்திற்கு வந்தேன், வந்த போது என் தம்பி குப்புற விழுந்து சடலமாக கிடந்தார். பின்னர் ஆம்புலன்ஸில் ஏற்றி ஆம்புலன்ஸ் உடன் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நாங்கள் என் தம்பி சுரேஷ்பாபுவின் பிணத்தை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் பெற்று கீரைத்துறை மின்மயானத்தில் தகனம் செய்தோம். மறுநாள் 01.02.2013ம் தேதியன்று இரவு சுப்பிரமணியபுரம் காவல்நிலையத்தில் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>1, 10 மற்றும் 18 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

என் தம்பி சுரேஷ்பாபு ஊரில் இருக்கும் போது ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் நான் என் தம்பி சுரேஷ்பாபுவின் வீட்டிற்கு சென்று நாங்கள் சாதாரணமாக பேசுவோம் என்றும் அப்போது 27.01.2013ம் தேதி ஞாயிற்று கிழமை அன்று என் தம்பி சுரேஷ்பாபுவிடம் நான் பேசிக்கொண்டிருக்கும் போது என் தம்பியின் மனைவி 1வது எதிரி அட்டாக் பாண்டி அவருடைய கூட்டாளியும் என் தம்பி சுரேஷ்பாபுவை கொலை செய்வதாக பயமுறுத்திய விபரத்தை என்னிடம் சொன்னார் என்றும் அதற்கு நான் போலீஸில் புகார் கொடுத்து பாதுகாப்பு கேட்போம் என்று சொன்னேன் என்றும் அதற்கு என் தம்பி சுரேஷ்பாபு அது எல்லாம் ஒன்று வேண்டாம் என்று சொல்லிவிட்டார் என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்று எனக்கு ஞாபகமில்லை. அரசியல் வாதிகள் மற்றும் அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் **1வது எதிரி** அட்டாக் பாண்டிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலீஸார் விசாரித்த போது 1ம் எதிரிக்கு வேளாண் விற்பனை குழு தலைவர் பதவி என் தம்பி தான்

வாங்கிகொடுத்தார் என்று சொல்லியுள்ளேன்.நான் குறிப்பிடுவதுபோல் 1ம் எதிரிக்கும் என் தம்பிக்கு பகை எதுவுமில்லை என்றால் சரியல்ல.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.03 16:29:18 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**மதுரை.**